## மாநிலங்களுக்கிடையே பிளவை ஏற்படுத்துகிற -

# தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பட்ஜெட்!

## நாடாளுமன்றத்தில் பா.ஜ.க. அரசு தாக்கல் செய்தது!

**புதுடெல்லி, ஜூலை 25 - மாநிலங்களுக்கிடையே பிளவை ஏற்படுத்துகிற, தமிழ்நாட்டை வஞ்சிக்கிற ஒன்றிய பட்ஜெட்டை நாடாளுமன்ற மக்களவையில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்துள்ளார்.**

ஒன்றிய பட்ஜெட்டில், கூட்டணிக்கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களுக்கு நிதியை வாரி வழங்கியுள்ள ஒன்றிய அரசு, தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்கவில்லை. ஏற்கனவே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டிற்கு, நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

**தமிழ்நாடு என்ற வார்த்தையே இடம் பெறவில்லை!**

தமிழ்நாட்டின் வளர்ச்சித் திட்டங்கள் புறக்கணிக்கப்பட்டு, நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்த பட்ஜெட்டில், தமிழ்நாடு என்ற வாசகம் கூட இடம்பெறவில்லை.

பா.ஜ.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகள் ஆளும் பீகார், ஆந்திரா மாநிலங்களுக்கு பல திட்டங்களும் அதிக அளவிலான நிதி ஒதுக்கீடுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. ஆந்திர மாநில வளர்ச்சிக்காக 15,000 கோடி ரூபாய் சிறப்பு நிதியுதவி அறிவிக்கபட்டுள்ளது. பீகார், உத்தரகாண்ட், சிக்கிம் மாநிலங்களுக்கு வெள்ளத்தடுப்புக்கு 11 ஆயிரம் கோடியை ஒதுக்கிய ஒன்றிய அரசு.

தமிழ்நாட்டிற்கு வெள்ள நிவாரண நிதி ஒதுக்கவில்லை. 3 ஆண்டுகளாக விடுவிக்கப்படாமல் இருக்கும் சென்னை மெட்ரோ ரயில் 2ம் கட்ட திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு பற்றிய அறிவிப்பும் இல்லை. தாம்பரம் - செங்கல்பட்டு இடையே மேம்பால விரைவுச் சாலைத் திட்டத்திற்கான ஒப்புதல் பற்றியும் அறிவிப்பு இல்லை.

கோவை மற்றும் மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு ஒப்புதல் பற்றிய அறிவிப்பும் ஒன்றிய பட்ஜெட்டில் இடம்பெறவில்லை. மேலும், தமிழ்நாட்டில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட ரயில்வே திட்டங்களுக்கு போதிய நிதி ஒதுக்கீடும் செய்யவில்லை. கிராமப்புற மற்றும் நகர்ப்புற வீட்டு வசதித் திட்டங்களின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்கான செலவு வரம்பை உயர்த்துதல் உள்ளிட்ட தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகள் எதையும் ஒன்றிய அரசு அறிவிக்கவில்லை.

**இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு என்ன ஆயிற்று?**

ஆண்டுதோறும் 2 கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்போம் என்று 2014-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. அறிவித்தது. இதன்படி கடந்த 10 ஆண்டுகளில் 20 கோடி பேருக்கு அளித்திருக்க வேண்டும். ஆனால் இது பற்றி எந்த அறிவிப்பும் இல்லை. இதே போன்று விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவோம் என்றும் அறிவிக்கப்பட்டது. ஆனால் கடந்த 10 ஆண்டுகளில் இதுபற்றி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதேபோல், ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் பீகார் மாநிலத்திற்கு நெடுஞ்சாலைகள் திட்டங்களை நிறைவேற்ற 26 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, பாட்னா பூர்ணியா நெடுஞ்சாலை, பக்சார் பாகல்பூர் நெடுஞ்சாலை, போத்கயா ராஜ்கிர்வைசாலி தர்பாங்கா நெடுஞ்சாலை மேம்பாட்டு பணிகளுக்கு 26 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கி அறிவிக்கப்பட்டுள்ளது.

பீகார் மாநிலம் பீர்பைண்டியில் புதிய 2,400 மெகாவாட் மின் நிலையம் அமைப்பது உள்ளிட்ட மின் திட்டங்கள் 21 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்றும் இதேபோல், பீகாரில் புதிய விமான நிலையங்கள், மருத்துவக் கல்லூரிகள் மற்றும் விளையாட்டு உள்கட்டமைப்புகள் அமைக்கப்படும் என்றும், பீகாரில் வெள்ள பாதிப்புகளை தடுக்க 11,000 கோடி ஒதுக்கீடு செய்யப்படுவதாகவும் நிர்மலா சீதாராமன் கூறினார்.

ஏழைகள், பெண்கள், இளைஞர்கள், விவசாயிகளை மையப்படுத்தி ஒன்றிய பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். கல்வி, வேலைவாய்ப்பு, மற்றும் திறன் மேம்பாட்டிற்காக பட்ஜெட்டில் 1 லட்சத்து 48 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார். அடுத்த 2 ஆண்டுகளில் ஒரு கோடி விவசாயிகளை இயற்கை விவசாயத்தில் ஈடுபடுத்த ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளதாக தெரிவித்த அவர், வேளாண் துறைக்கு பட்ஜெட்டில் 1 லட்சத்து 52 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

வேலை வாய்ப்பை உருவாக்குதல், திறன் மேம்பாடு உள்பட 5 அம்ச திட்டத்துக்கு 2லட்சம் கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் அறிவித்தார். உயர்கல்வியில் சேரும் மாணவர்களுக்கு பத்து லட்சம் ரூபாய் வரை கடன் வழங்கப்படும் என்றும் பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் அடுத்த 5 ஆண்டுகளில், ஒரு கோடி ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு வீடு கட்டித்தர 10 லட்சம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் தெரிவித்தார். பணிபுரியும் மகளிருக்காக நாடுமுழுவதும் தங்கும் விடுதி கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

**பஞ்சாப் மாநிலமும் புறக்கணிப்பு!**

ஒன்றிய பட்ஜெட்டில் தனது கூட்டணி கட்சிகள் ஆளும் ஆந்திரா, பீகார் மாநிலங்களுக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ள பாஜக அரசு, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு எந்த வளர்ச்சி திட்டங்களையும் அறிவிக்கவில்லை. இந்த நிலையில், ஒன்றிய பட்ஜெட்டில்பஞ்சாப்மாநிலமும்புறக்கணிக்கப்பட்டுவதாக கூறி காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரும், அக்கட்சியின் மாநில தலைவருமான ராஜா பிரார் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது பேசிய ராஜா பிரார், பஞ்சாப் மாநிலத்தின் மீதான ஒன்றிய அரசின் பாகுபாடு நிறுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

**வருமான வரியில் சிறிய மாற்றம்!**

வருமான வரித்திட்டத்தில் மாற்றம் செய்து பட்ஜெட்டில் ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். அதன்படி, 3 லட்சம் வரை ஆண்டு வருமானம் பெறுவோருக்கு வரி விலக்கு அளிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் 3 லட்சம் ரூபாய்க்கு மேல் முதல், 7 லட்சம் வரை ஆண்டு வருமானம் பெறுவோருக்கு 5 சதவிகிதம் வரியும், 7 லட்சம் ரூபாய்க்கு மேல் முதல், 10 லட்சம் ரூபாய் வரை ஆண்டு வருமானம் பெறுவோருக்கு 10 சதவிகிதம் வரியும், 10 லட்சம் ரூபாய்க்கு மேல் முதல், 12 லட்சம் ரூபாய் வரை ஆண்டு வருமானம் பெறுவோருக்கு 15 சதவிகிதம் வரியும் விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

12 லட்சம் ரூபாய்க்கு மேல் முதல், 15 லட்சம் ரூபாய் வரை ஆண்டு வருமானம் பெறுவோருக்கு 20 சதவிகிதம் வரியும்,

15 லட்சம் ரூபாய்க்கு மேல் ஆண்டு வருமானம் பெறுவோருக்கு 30% வரி விதிக்கப்படும் என்றும் ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

வருமான வரி முறையில் வரி சலுகை பெறுவதற்கான நிலையான கழிவு (Standard Deductions) 50 ஆயிரம் ரூபாயிலிருந்து 75 ஆயிரம் ரூபாயாக அதிகரிப்படுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். வருமான வரி விலக்கு உச்சவரம்பு 5 லட்சம் ரூபாய் வரை உயர்த்தப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் மாத சம்பளதாரர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

ஒன்றிய நிதியமைச்சர் தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையில், 3 வகையிலான புற்றுநோய் மருந்துகளுக்கு, சுங்க வரியிலிருந்து முழுமையாக வரிவிலக்கு அளிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், செல்போன் உதிரிபாகங்கள், சார்ஜர்கள் மீதான சுங்கவரி 15 சதவீதமாக ஆக குறைத்து அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதேபோல், தங்கம் மற்றும் வெள்ளி மீதான சுங்க வரி 15 சதவீதத்தில் இருந்து 6 சதவீதம் ஆகவும், பிளாட்டினத்தின் மீதான சுங்கவரி 15 சதவீதத்தில் இருந்து 6.5 சதவீதம் ஆகவும் குறைத்து அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 25 தாது பொருட்களுக்கு வரி விலக்கு அளித்து பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ‘ஒன்றிய அரசின் ‘நிதி ஆயோக்’ கூட்டத்தைப் புறக்கணிக்கிறேன்’!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி! - முதல் பக்கத் தொடர்ச்சி

பல கோரிக்கைகளை அதில் எடுத்து வைத்தேன்; நிதிநிலை அறிக்கையில் இடம்பெற வேண்டும் என்று!

- **மூன்று ஆண்டுகளாக விடுவிக்கப்படாமல் இருக்கும் சென்னை மெட்ரோ ரயில் திட்டத்துக்கான நிதியை விடுவிக்க வேண்டும் என்றும்**
- **கோவை மற்றும் மதுரையில் மெட்ரோ ரயில் திட்டங்களுக்கான ஒப்புதலை விரைந்து வழங்க வேண்டும் என்றும்**
- **தமிழ்நாட்டில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள ரயில்வே திட்டங்களை விரைந்து செயல்படுத்திட நிதியை ஒதுக்கீடு செய்யுங்கள் என்றும்**
- **தாம்பரம் செங்கல்பட்டு இடையே மேம்பால விரைவு சாலைத் திட்டத்துக்கான ஒப்புதலை உடனடியாக வழங்க வேண்டும் என்றும் சில கோரிக்கைகளை வைத்திருந்தேன். இதில் எதையும் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இந்த பட்ஜெட்டில் அறிவிக்கவில்லை.**

**இரு மாநிலங்களுக்கு மட்டும் எண்ணற்ற திட்டங்கள்!**

மைனாரிட்டி பா.ஜ.க.வை, மெஜாரிட்டி பா.ஜ.க.வாக ஆக்கிய ஒரு சில மாநிலக் கட்சிகளைத் திருப்திப்படுத்தும் வகையில் ஒரு சில மாநிலங்களுக்கு மட்டும் சில திட்டங்களை அறிவித்துள்ளார்கள். அறிவித்துள்ளார்களே தவிர, அதையும் நிறைவேற்றுவார்களா என்பது என்னைப் பொறுத்தவரைக்கும் சந்தேகம்தான்.

எப்படி, தமிழ்நாட்டுக்கு மெட்ரோ ரயில் என்று அறிவித்து விட்டு, நிதி ஒதுக்காமல் இன்றைக்கு வரையில் ஏமாற்றி வருகிறார்களோ அதுபோல, அந்த மாநிலங்களுக்கும் எதிர்காலத்தில் நடக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம் உள்ளது?

தமிழ்நாடு மிகப்பெரிய இரண்டு இயற்கைப் பேரிடர்களை எதிர்கொண்டது. 37 ஆயிரம் கோடி ரூபாய் வரை இழப்பீடு நாம் கேட்டோம். தொடர்ந்து வலியுறுத்திக் கேட்டுக் கொண்டிருந்தோம். ஆனால், இதுவரை 276 கோடி ரூபாய்தான் கொடுத்துள்ளார்கள். அது சட்டப்படி வரவேண்டிய தொகை. இதில் என்ன வேடிக்கை என்னவென்றால், இரண்டு மூத்த ஒன்றிய அமைச்சர்கள் - பாதுகாப்புத் துறை அமைச்சர், நிதியமைச்சர் என்று இருவரும் நேரடியாகப் பார்த்துவிட்டுச் சென்றார்கள். இதுதான் தமிழ்நாட்டு மக்களை பா.ஜ.க. மதிக்கின்றதா? என்பதுதான் என்னுடைய கேள்வி.

**ஒன்றிய அரசின் சிந்தனையில் - ‘தமிழ்நாடு’ அறவே இல்லை!**

தமிழ்நாட்டுக்கான எந்தச் சிறப்புத் திட்டமும் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லை. நமது கோரிக்கைகள் எதுவுமே இதில் நிறைவேற்றப்படவில்லை. புதிய ரயில்வே திட்டங்கள் அறிவிக்கப்பட வில்லை. ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியைத் தாங்கிப் பிடிக்கும் மாநிலங்களைத்தவிர மற்றஎல்லாமாநிலங்களையும் நிதி அமைச்சர் மறந்தே போய் விட்டார்.

‘தமிழ்நாடு’ என்ற சொல்லே நிதி நிலை அறிக்கையில் இல்லை என்று சொல்வதைவிட, ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியாளர்களின் சிந்தனையிலும், செயலிலும் தமிழ்நாடு இல்லை. பாரபட்சமும் ஏமாற்றமும்தான் இந்த அறிக்கையில் இருக்கிறது.

**நிதிநிலை அறிக்கையில் அநீதியே அதிகம் உள்ளது!**

ஒரு நாட்டின் நிதி நிலை அறிக்கை என்பது அந்த நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து மாநிலங்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். அந்த வகையில், நிதி ஒதுக்கீட்டில் நீதி இல்லை. அநீதியே அதிகம் உள்ளது.

“அரசியலை தேர்தல் களத்தில் பார்த்துக் கொள்ளலாம். இப்போது நாம் இணைந்து நாட்டிற்காகப் பணியாற்ற வேண்டும்” என்று பிரதமர் அவர்கள் நேற்றுதான் சொல்லியிருக்கிறார். அனைத்துப் பத்திரிகைகளிலும் அது வந்திருக்கிறது. ஆனால், அவர் நேற்று சொன்னதற்கு எதிராக இன்றைக்கு அவருடைய அரசின் நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது. வாக்களித்தவர் களுக்கு மட்டுமல்ல, வாக்களிக்காதவர்களுக்கும் நன்மைகள் செய்வது தான் ஒரு சிறந்த அரசு என்று நான் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறேன். அப்படிதான் தமிழ்நாடு அரசின் செயல்பாடுகளும் இருக்கிறது. இதைப் பார்த்தாவது, ஒன்றிய அரசு தன்னுடைய போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**நிதி ஆயோக்: ஒட்டு மொத்தமாகப் புறக்கணிப்பதே சரியானது!**

வருகின்ற 27ஆம் தேதி பிரதமரின் தலைமையில் ‘நிதி ஆயோக்’ கூட்டம் நடப்பதாக அறிவிக்கப்பட்டி ருக்கிறது. நானும் அதில் பங்கெடுக்கத் திட்டமிட்டு இருந்தேன். அதற்காகத் தயாராகிக் கொண்டிருந்தேன். ஆனால், நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு ஒட்டுமொத்தமாகப் புறக்கணிக்கப்பட்ட தைக் கண்டிக்கும் வகையில் அந்தக் கூட்டத்தில் பங்கேற்க வேண்டாம் என்று நான் முடிவெடுத்திருக் கிறேன். அதைப் புறக்கணிக்கப்போகிறேன்.

தமிழ்நாட்டைப் புறக்கணிக்கும் ஒன்றிய அரசின் கூட்டத்தை ஒட்டுமொத்தமாகப் புறக்கணிப்பதே சரியானது என நினைக்கிறேன்.

தமிழ்நாட்டின் தேவைகளை, உரிமைகளை நிலைநாட்ட மக்கள் மன்றத்தில் தொடர்ந்து நாங்கள் போராடுவோம். நாளைய தினம் நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் டெல்லியில் போராட்டம் நடத்தப் போகிறார்கள், அதற்கு நாங்கள் அனுமதியும் வழங்கியிருக்கிறோம்.

**கேள்வி:** 40க்கு 40 வெற்றிதான் தமிழ்நாடு புறக்கணிக்கப்படுவதற்கான காரணம் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** தமிழ்நாட்டு மக்கள் மீது அவ்வளவு ஆத்திரத்தில் இருக்கிறார்கள் அவர்கள்.

**கேள்வி:** தமிழ்நாடு மிகவும் பிடித்திருக்கிறது என்று சொல்லியிருந்தார் பிரதமர், அது பற்றி...

**முதலமைச்சர்:** தமிழ்நாடு என்று மட்டுமா சொன்னார், திருக்குறளும் பிடிக்கும் என்று சொன்னாரே, திருக்குறள் என்று ஒரு வார்த்தைகூட கிடையாது, தமிழ்நாடு என்ற ஒரு வார்த்தைகூட பட்ஜெட்டில் கிடையாது.

**கேள்வி:** பட்ஜெட்டில் நிதி ஒதுக்காத போது, தமிழ்நாட்டில் நிறைய திட்டங்கள் இருக்கின்றன. மெட்ரோ ரயில் போன்ற திட்டங்கள் இருக்கின்றன. தமிழ்நாடு அரசு அவற்றை எப்படிக் கையாளும்?

**முதலமைச்சர்:** இதுவரைக்கும் எப்படி கையாண்டு கொண்டிருக்கிறோமோ, நாங்கள் அப்படியே கையாளுவோம்.

**கேள்வி:** பத்திரப்பதிவுக் கட்டணங்களை மாநில அரசுகளுக்குக் குறைத்திருக்கிறோம் என்று நிதியமைச்சர் சொல்லியிருக்கிறார். அது பற்றி...

**முதலமைச்சர்:** நான்தான் ஒட்டுமொத்தமாகச் சொல்லிவிட்டேனே! தமிழ்நாட்டை ஒட்டுமொத்தமாகப் புறக்கணித்திருக்கிறார்கள். புறக்கணித்த காரணத்தி னால் பிரதமர் கூட்டுகின்ற அனைத்து முதல மைச்சர்கள் கூட்டத்தைப் புறக்கணிக்கப் போகிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.